OS.No. 134/2019

Date : 05.11.2025

Witness Name & Rank – விஸ்வநாதன் - PW1

சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்

1. நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் செட்டிபாளையம் ஓராட்டு குப்பை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆவணங்களை படித்துப் பார்த்து புரிந்து கொள்ள முடியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் சட்ட அறிவிப்பு அனுப்புவது வழக்கு தாக்கல் செய்வது போன்ற நடவடிக்கைகளுக்கு யார் வழக்கறிஞரிடம் சொன்னது என்றால் நான் தான். வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரனம் என்றால் ஒரே ஏக்கர் பூமி ஆகும். மேற்படி வழக்கு சொத்து பிரதிவாதிக்கு எவ்வாறு பாதிக்கப்பட்டது என்றால் அவரது மனைவி சாந்தாமணியிடம் இருந்து 2013 ல் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் அவருக்கு வந்துள்ளது.
2. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் பிரதிவாதிக்கு எவ்வளவு ஏக்கர் பூமி வந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் பூமிக்கு தெற்கு பக்கம் யாருடைய பூமி உள்ளது என்றால் சாந்தாமணியின் மீத பூமி உள்ளது. வடக்கு யாருடைய பூமி உள்ளது என்றால் வடக்கு பக்கமும் சாந்தாமணி பூமி உள்ளது. கிழக்கு பக்கம் தென் வடல் தார் சாலை என்றால் சரிதான். மேற்கு பக்கம் யாருடைய பூமி என்றால் வள்ளியம்மாள் பூமியாகும். மேற்படி வள்ளியம்மாள் யார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து இருக்கு தெற்கு பக்கம் அமைந்துள்ள சாந்தாமணி இடத்தில் தான் அவர் வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். மேற்படி சாந்தாமணி வீடு அமைந்துள்ள பூமிக்கு தெற்கு பக்கம் கிழ மேல் தார் சாலை என்றால் சரிதான்.
3. எனது வழக்குரையில் நான் பிரதிவாதி எனக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்த போது அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தையும் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அந்த அசல் செட்டில்மெண்ட் ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என எனது

பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் அசல் என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயமும் டெக்ஸ்டைல்ஸும் நடத்தி வருகிறேன். எவ்வளவு காலமாக டெக்ஸ்டைல் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் 15 ஆண்டுகளாக செய்து வருகிறேன். பிரதிவாதி எனக்கு எவ்வளவு காலமாக பழக்கம் என்றால் இடம் வாங்குவதற்கு இடம் பார்க்க சென்றதிலிருந்து பழக்கம்நான் எப்போது இடம் பார்க்க சென்றேன் என்றால் 2018 ல் கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னால் சென்றதாக ஞாபகம்.

4. தாவா சொத்தில் என்ன அமைப்புகள் உள்ளது என்றால் தாவா சொத்திற்கு இரண்டு பக்கமும் தென்னை மரங்களும் காலி மனை இடமும் உள்ளது. எத்தனை தென்னை மரங்கள் இருந்தது என்றால் பெரிய மரங்கள் 10 சின்ன தென்னை மரங்கள் 22 மரங்கள் இருந்திருக்கும். எவ்வாறு வழக்கு சொத்து விற்பனைக்கு உள்ளதாக எனக்கு தெரிய வந்தது என்றால் புரோக்கர் மூலம் தெரிய வந்தது. யார் அந்த புரோக்கர் என்றால் பொன்னுச்சாமி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் ஆவார்கள். பிரதிவாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. பிரதிவாதிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு பையன் உள்ளார் என நினைக்கிறேன். தாவா சொத்து இருக்கு சற்று தள்ளி ஒரு பால் பண்ணை உள்ளது என்றால் அப்போது இருந்தது. அதேபோல் சற்று தள்ளி மனைப்பிரிவுகள் உள்ளது என்றால் சரிதான். அது ஒரு பெரிய மனை பிரிவு என்றால் சரிதான்.

5. அந்த மனை பிரிவு 2017 காலத்தில் ஒரு சென்ட் ஒரு லட்சத்திற்கு செல்லும் என்றால் போனாலும் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு நான் கடைசியாக எப்போது சென்றேன் என்றால் நான் இந்த வழக்கு போட்ட பிறகு போகவில்லை. எனது வழக்குரையிலும் பிரமாண வாக்குமூலத்திலும் அறிவிப்பிலும் சொல்லி உள்ளது போல் மேற்படி கிரைய ஒப்பந்தம் போட்ட பிறகு நான் சுவாதீனத்தில் வழக்கு சொத்தில் இருந்ததாக சொல்லி உள்ளது தவறு என்றால் சரிதான். வழக்கு சொத்தில் இன்றைய தேதி வரை பிரதிவாதி தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரிதான். அந்த இடத்தில் விவசாயமும் செய்து வருகிறார் என்றால் சரிதான்அதுபோல நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்த

பத்திரத்திலும் சுவாதீனம் விடப்படாத கிரைய ஒப்பந்த பத்திரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக சுவாதீனம் விடப்பட்டு கிரைய ஒப்பந்தம் போடப்பட வேண்டும் என்றால் அதற்கு தனியான முத்திரை கட்டணம் செலுத்தப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது ஆனால் நான் சுவாதீனம் எடுக்கவில்லை.

6. கிரைய ஒப்பந்தம் எவ்வளவு காலத்திற்கு போடப்பட்டது என்றால் ஆறு மாத காலம் நிர்ணயிக்கப்பட்டதுஎனது அறிவிப்பு வழக்குரை பிரமாண வாக்கு மூலத்தில் மேற்படி கால நிர்ணயம் செய்யப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் நான் கிரய ஆவணம் எழுத எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்ததாக குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் அதில் சொல்லவில்லை ஆனால் நான் தினம் தினம் நான் பிரதிவாதியிடம் கேட்டு வந்தேன். நான் அவ்வாறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை அவ்வாறு எடுத்திருந்தால் மேற்படி சங்கதியை அறிவிப்பு வழக்குரை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி இருப்பேன் எனவே நான் வழக்கிற்காக தற்போது நான் சாட்சியம் அளிக்கிறேன் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எனது வழக்குரையில் பிரதிவாதியை 30/7/2018 மற்றும் 25/12/2018 மட்டுமே நான் பிரதிவாதியை தொடர்பு கொண்டதாக குறிப்பிட்டு சொல்லி உள்ளேன் என்றால் நான் கிரைய ஒப்பந்தம் போட்டு மூன்று மாதத்தில் இருந்தே நான் பிரதிவாதி அணுகி வந்தேன் ஆனால் அவர் முன் வரவில்லை. நான் எனது வழக்குரையில் பிரதிவாதிக்கு குடும்ப பிரச்சனை இருந்ததாக சொல்லி உள்ள நிலையில் என்ன பிரச்சனை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பிரதிவாதிக்கு எந்தவிதமான குடும்பப் பிரச்சனையும் இல்லை நாம் வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. மேற்படி பிரதிவாதி சொத்து கிரையம் செய்ய அதிக பணம் என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. அவ்வாறு பிரதிவாதி அதிக தொகை கேட்டதாக எனது வழக்குரையில் இருந்தால் அது தவறு என்றால் சரிதான். பொதுவாக கிரைய ஒப்பந்தம் இருந்தால் மூன்றாவது நபர்கள் வில்லங்கம் ஏற்படுத்த முடியாது என்றால் சரிதான்மேற்படி பிரதிவாதி அவ்வாறு வில்லங்கம் ஏற்படுத்த ஏதேனும் முயற்சி செய்தாரா என்றால் மற்ற நபர்களை அழைத்து வந்து நிலத்தை காண்பித்துக் கொண்டிருந்தார். யார் அந்த நபர்கள் என்று குறிப்பிட்டு தெரியுமா

என்றால் தெரியாது. எனக்கு பொன்னுச்சாமி மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் அவ்வாறு சொன்னார்கள். நான் வழக்கு மூலம் ஏற்படுத்த வேண்டியே அவ்வாறு நான் தவறாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

8. அவ்வாறு வில்லங்கம் ஏற்படுத்த முயற்சிப்பதாக எனது வாக்குமூலத்தில் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்கு மூலத்தில் வருவாய்த்துறை ஆவணங்களில் மாற்றம் செய்வதற்காக கால அவகாசம் கோரியதாக சொல்லி உள்ள நிலையில் என்ன மாறுதல் செய்வதற்கு என்றால் அவ்வாறு எந்தவிதமான மாறுதலும் இல்லை. மேற்சொன்ன சங்கதியை எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. நாங்கள் நிர்ணயித்த ஆறு மாத காலமானது எப்போது முடிவடைந்தது என்றால் 3/7/2018 இல் முடிவடைந்தது. எனது வழக்குரையின்படி நான் பிரதிவாதியை அணுகியது 30/7/2018 மற்றும் 25/12/2018 என்றால் சரிதான். அதன் பிறகு வழக்கறிஞர் அறிவிப்பானது 23/1/2019 ல் தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. அதன் பிறகு எட்டு மாதம் கழித்து தான் வழக்கானது இந்த நீதிமன்றத்தில் 04.09.2019–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சட்ட அறிவிப்பு வழக்கு காலதாமதமாக ஏன் செய்யப்பட்டது என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தில் பிரதிவாதி முதலில் ஆஜராகாத நிலையில் எனக்கு சாதகமான ஒரு தலைப்பட்ச தீர்ப்பானை வழங்கப்பட்டு அதன் பிறகு ரத்து செய்யப்பட்டு நான் விசாரிக்கப்படுகிறேன் என்றால் சரிதான். அந்த ஒரு தலைபட்ச தீர்ப்பாணையின் படி மீத கிரைய தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்பட்டிருந்த நிலையில் நான் அந்த மீத கிரைய தொகையை உரிய காலத்திற்குள் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி வைப்பீடு சம்பந்தமாக எந்த விதமான அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல தெரிவித்தேன். நான் வழக்குக்காக தவறாக சொல்கிறேன் நான் எந்த விதமான தகவலும் தெரிவிக்கவில்லை அவ்வாறு தெரிவித்து இருந்தால் எழுத்துப்பூர்வமாகவே அறிவிப்பு அனுப்பி இருப்பேன் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்ட போது வழக்கு சொத்திற்கு அரசு வழிகாட்டி

மதிப்பாக ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 13 லட்சத்து 40 ஆயிரம் என்றால்அது பற்றி எனக்கு தெரியாது. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பமிட்ட பொன்னுச்சாமி மூலம்தான் எனக்கு பிரதிவாதி பழக்கம் என்றால் சரிதான்.

10. மேற்படி பிரதிவாதி பொன்னுச்சாமி மூலம் எனக்கு என்னிடம் அவரது குடும்பத் தேவைக்காக டிசம்பர் 2017 காலத்தில் ரூபாய் 5 லட்சத்து ஐம்பதாயிரம் கடன் கேட்டிருந்தார் என்றால் இல்லை. அதன் அடிப்படையில் நான் பிரதிவாதிக்கு 12 சதவீத வட்டியின் அடிப்படையில் 09.01.2018 தேதி ஐந்து லட்சத்து 50 ஆயிரத்தை கடனாக கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. ஜனவரி 2018 இல் இருந்து டிசம்பர் 2018 வரை பிரதிவாதி என்னிடம் சரியாக வட்டி செலுத்தி வந்தார் எங்கள் இருவருக்கும் நல்ல பழக்கம் என்பதால் நான் ரசீது கொடுப்பதில்லை என்றால் சரியல்ல.

வழக்கறிஞர்வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.